**கனம் சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**முன்னிலை: திருமதி. R. கீதா, B.A.,B.L.,**
**சார்பு நீதிபதி, மானாமதுரை.**
**2023ம் வருடம் டிசம்பர் மாதம் 22ம் நாள் வெள்ளிக்கிழமை**
**I.A.No.1/2023**
**In**
**O.S.No.47/2021**

ஷீலாதேவி ...மனுதார்/ வாதி

/எதிர்/

1. கிருஷ்ணமூர்த்தி
2. முத்துகுமாரி
3. சரவணன்
4. சுப்பிரமணியன்
5. பாஸ்கரன்
6. பாண்டிமுத்து ... 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

7. கண்ணாத்தாள் ..7ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர்

இம்மனுவானது, இறுதி விசாரணைக்காக 18.12.2023ம் தேதி என் முன்னர் வந்தபோது மனுதார்/வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு. M. கணேசன், பி.எஸ்.சி., பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் திரு. M. மிதுன், அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 6ம் எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் தரப்பில் ஒருதலைப்பட்ச உத்திரவு பிறப்பிக்கப்பட்டும், எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதங்கள் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று (22.12.2023) இந்நீதிமன்றம் வழங்கலான:-

**உத்திரவு**

இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 1, விதி 10(2) மற்றும் பிரிவு 151-ன்படி மனுவில் கண்ட நபரை 7ம் பிரதிவாதியாக வழக்கில் சேர்த்துக்கொண்டு வழக்கை மேல்நடத்த உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதார்/வாதி தரப்பிலான மனு அபிடவிட்டின் சுருக்கம்:**

மனுதார் தனது மனுவில், தாவா வழக்கில் பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொண்ட கிரையப்பத்திரம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்தும், பாகப்பிரிவினைக்கான முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக்கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா வழக்கில் இரண்டாவது இலக்கச் சொத்து சம்மந்தமாக கடந்த 05.12.2022ம் தேதியன்று வில்லங்கச்சான்றிதழ் பார்த்த போது தாவா இரண்டாவது இலக்கச் சொத்தை 6ம் எதிர்மனுதார்/6ம் பிரதிவாதி கண்ணாத்தாள் என்பவருக்கு பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் மூலம் கிரையம் செய்து கொடுத்த விபரம் மனுதார்க்கு தெரியவந்தது என்றும், அதனால் மேற்படி கணணாத்தாள் என்பவரை தாவா வழக்கில் 7ம் பிரதிவாதியாக சேர்த்துக்கொண்டு வழக்கை மேல்நடத்த வேண்டும் என்று மனுதாருக்கு சட்ட அறிவுரை கிடைக்கப்பெற்றுள்ளது என்றும், அதனால் தாவா 2வது இலக்கச் சொத்தை 6ம் பிரதிவாதியிடமிருந்து சட்ட விரோதமாக கிரையம் வாங்கியுள்ள மேற்படி கண்ணாத்தாள் என்பவரை தாவா வழக்கில் தரப்பினராக சேர்த்து வழக்கை மேல்நடத்த வேண்டும் என்றும், மேற்படி கண்ணாத்தாள் என்பவரை தாவா வழக்கில் தரப்பினராக சேர்ப்பதால் எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகளுக்கு எவ்வித இழப்பும் ஏற்படக்கூடியதில்லை என்றும், ஆகையால் மனுவில் கண்ட நபரை 7ம் பிரதிவாதியாக வழக்கில் சேர்த்துக்கொண்டு வழக்கை மேல்நடத்த மனுதார் மனு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

**3. 1ம் எதிர்மனுதார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையின் சுருக்கம்:**

The 1st Respondent contended that the petitioner had filed a suit for partition against him and in the meanwhile, the petitioner has come up with a petition to implead one Kannathal alleging her to be the subsequent purchaser during the pending of the suit, the impleading petition sought to be introduced in the main suit is a mere protracting and prolonging proceedings of the petitioner since the alleged act will be hit by the doctrine of lis pendens and no other proceedings is required until the petitioner proves her case during the pendency of the case.

The 1st Respondent further contended that the petitioner had orally relinquished her right over the property to him now cannot seek for the relief of partition, the petitioner seeks for impleading one Kannathal alleging herself to be the subsequent purchaser is to be proved by the petitioner and this Hon'ble Court may consider the said person as to whether she is a necessary party to the proceedings at this point of time and moreover whether the proposed impleading will help this Hon'ble Court in coming to a conclusion for the relief sought by the petitioner in the main suit, hence this Hon'ble Court may be pleased to dismiss the petition filed by the petitioner/plaintiff with cost.

**4. 7ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரையின் சுருக்கம்:**

7ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர் தனது எதிர்உரையில் மனுதார்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள மனு படித்தேன் என்றும், உண்மைக்கு புறம்பாகவும், பொய்யாகவும் புனையப்பட்ட மனு என்றும், தாவா வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட உள்நோக்கத்தோடு மேற்படி மனுதார்/வாதி தாவா மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், தாவா மனு நிலைநிற்கத்தக்கதில்லை என்றும், தாவா வழக்கில் கண்ட 2வது இலக்கச்சசொத்து மனுதாரருக்கு எந்த வகையில் பாத்தியப்பட்டது என்று மனுவில் தெளிவுபடுத்தப்படவில்லை என்றும், மனுவில் கண்ட 1ம் எதிர்மனுதாரருக்கு தனிப்பட்டு அவரது பெயருக்கு பட்டா ஏற்பட்டு அவர் வரி வகையறாக்கள் செலுத்தி அனுபவம் செய்து வந்து அவரிடம் இருந்த மனுவில் கண்ட 6ம் எதிர்மனுதாரர் நல்லெண்ணத்தின்அடிப்படையில் தகுந்த பிரதி பிரயோஜனத்தின் அடிப்படையில் ரூ.28,900/-த்தை 1ம் எதிர்மனுதாரரிடம் கொடுத்து கடந்த 29.04.2019ம் தேதி மானாமதுரை சார்பதிவக ஆவண எண்.1083/2019 என்ற எண்ணில் கிரையம் பெறப்பட்டு அதனடிப்படையில் 6ம் எதிர்மனுதாரர் தாவா சொத்தை தனது முழுகட்டுப்பாட்டில் வைத்து அனுபவம் செய்து வந்தார் என்றும், 6ம் எதிர்மனுதாரர் பெயரில் பட்டாவும் ஏற்பட்டு தனது அனுபவத்தில் வைத்து அனுபவம் செய்து வந்தார் என்றும், மனுதார் தாக்கல் செய்துள்ள மனுவில் 7ம் எதிர்மனுதாரர் 2வது இலக்கச் சொத்தை எந்த தேதி வருடத்தில் கிரையம் பெற்றார் என்று தனது மனுவில் தெளிவுப்படுத்தாததில் இருந்தே மனுதாரருக்கு தாவா 2வது இலக்கச்

சொத்தில் உரிமை இல்லை என்று தெள்ளத்தெளிவாக தெரியவருகிறது என்றும், இதிலிருந்து மனுதாரரின் மனுவும் தள்ளுபடி செய்யக்கூடியது என்றும், மனுவில் கண்ட 6ம் எதிர்மனுதாரர் தாவா 2வது இலக்கச் சொத்தை தனது தனிப்பட்ட அனுபவத்திலும் சுவாதீனத்திலும் வைத்து அனுபவம் செய்து வரும்பொழுது தனது குடும்பத்தின் அவசரத் தேவைக்காக பணம் தேவைப்பட்டதால் 7ம் எதிர்மனுதாரரை தொடர்பு கொண்டு ரூ.31,000/- ரொக்கம் பெற்றுக்கொண்டு கடந்த 20.10.2020ம் தேதி 6ம் எதிர்மனுதாரராகிய பாண்டிமுத்து என்பவரிடம் நல்லெண்ணத்தின் அடிப்படையில் தகுந்த பிரதி பிரயோஜனத்தின் பெயரில் பணத்தை கொடுத்து மானாமதுரை சார்பதிவக ஆவண எண்.3115/2020 என்ற எண்ணில் கிரையம் பெற்று தாவா 2வது இலக்கச் சொத்தை 7ம் எதிர்மனுதார் கட்டுப்பாட்டில் வைத்து 7ம் எதிர்மனுதார் பெயரில் பட்டா ஏற்பட்டு நாளது தேதிவரை அரசுக்கு செலுத்த வேண்டிய வரிவகையறாக்களை செலுத்தி 7ம் எதிர்மனுதாரின் முழுக்கட்டுப்பாட்டில் வைத்து அனுபவம் செய்து வருகிறார் என்றும், மனுதாரரும் சுத்த கரங்களுடன் நீதிமன்றத்தை நாடி மனுதாக்கல் செய்யவில்லை என்றும், 7ம் மனுதாரர் 6ம் மனுதாரரிடம் நல்லெண்ணத்தின் அடிப்படையில் தாவா சொத்திற்கு உண்டான முழு பணத்தையும் கொடுத்து கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றும், தாவா சொத்திற்கும் மனுதாரருக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றும், 7ம் எதிர்மனுதாரரை அலைக்கழிவு செய்யவேண்டும் என்ற கெட்ட உள்நோக்கத்தோடு தாவா மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா 2வது இலக்கச் சொத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கு தனிப்பட்ட சொத்தாக இருந்து அவரும் தனது குடும்பச் செலவிற்காக 6ம் எதிர்மனுதாரரை தொடர்பு கொண்டு ரூ.28,900/-த்தை பெற்றுக் கொண்டு கிரையப் பத்திரம் மூலம் 6ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்படுத்திவிட்டார் என்றும், 6ம் எதிர்மனுதாரரும் குடும்பச் செலவிற்காக தாவா சொத்திற்கான முழு பணத்தையும் பெற்றுக்கொண்டு 7ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்படுத்திவிட்டார் என்றும், 7ம் எதிர்மனுதாரரும் நல்லெண்ணத்தின் அடிப்படையில் கிரையம் பெற்ற கிரையப்பத்திரத்தின் மூலம் நாளது தேதி வரை தனது முழுக்கட்டுப்பாட்டில் வைத்து அனுபவம் செய்து வருகிறார் என்றும், மனுதாரருக்கு தாவா 2வது இலக்கச் சொத்தில் எந்த உரிமையும் கிடையாது என்றும், மனுதாரர் மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்றும், ஆகையால்

மனுதார்/வாதியின் மனுவை 7ம் எதிர்மனுதார் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி எதிர்வுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

**5.** இரு தரப்பிலும் சாட்சிய சான்றாவணங்கள் எதுவும் இல்லை.

**6.** எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**7.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்:

**கேள்வி:**

1. மனுதாரர்/வாதி தரப்பில் இம்மனுவில் குறிப்பிட்டுள்ள 7ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர் இவ்வழக்கின் அவசிய தரப்பினரா?
2. மனுவில் குறிப்பிட்டுள்ள 7ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினரை அசல் வழக்கில் 7ம் பிரதிவாதியாக சேர்க்க அனுமதிக்கலாமா?
2. இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

**8.** மனுதாரர்/வாதி தரப்பில் தாவா சொத்துக்கள் வாதி மற்றும் 1ம் பிரதிவாதியின் தந்தை கண்ணப்பன் என்பவருக்கு பூர்வீக பாத்தியப்பட்டு அவர் அனுபவம் செய்து வந்து அவர் இறப்புக்கு பின்னர் தாவா சொத்துக்களை மேற்படி கண்ணப்பன் வாரிசுகளான வாதி மற்றும் 1ம் பிரதிவாதி பொதுவில் வைத்து கூட்டாக அனுபவித்து வருவதாகவும் இந்நிலையில் தாவா சொத்துக்களை பொறுத்து வாதிகளுக்குரிய 1/2 பாகத்தை 1ம் பிரதிவாதியிடம் பாகம் பிரித்து தரக்கோரி கேட்டபோதெல்லாம் பாகப்பிரிவினை செய்து வாதியின் பாகத்தை பிரித்துத்தராமல் காலதாமதம் செய்துவந்ததாகவும் அதனால் தாவா சொத்துக்களை பொறுத்து வாதிக்குரிய 1/2 பாகத்தை பிரித்து தரக்கோரி பாகப்பிரிவினைக்கான முதல்நிலை தீர்ப்பாணை பரிகாரம் வேண்டியும் தாவா 1ம் லக்க சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதியின் கணவர் இறந்துபோன நித்தியானந்தம் என்பவருக்கு 02.02.2009 தேதி எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் அதனைத்தொடர்ந்து தாவா 1ம் லக்க சொத்தை பொறுத்து 2ம் பிரதிவாதியின் கணவர் நித்தியானந்தம் 3ம் பிரதிவாதி பெயருக்கு 25.02.2009ம் தேதி கிரையம் செய்து கொடுத்ததாகவும் அதன் பின்னர் தாவா 1ம் லக்க சொத்தினை 3ம் பிரதிவாதி 4, 5 பிரதிவாதிகளுக்கு 10.05.2010ம்

தேதி கிரையம் செய்து கொடுத்துள்ளதாகவும், அதேபோல தாவா 2ம் லக்க சொத்தினை 1ம் பிரதிவாதி 6ம் பிரதிவாதிக்கு 29.04.2019ம் தேதி கிரையம் செய்து கொடுத்ததாகவும் எனவே தாவா 1, 2 லக்க சொத்துக்களை பொறுத்து 1 முதல் 3 பிரதிவாதிகள் ஏற்படுத்திய விற்கிரைய வில்லங்கம் இல்லா நிலையது என பரிகாரம் வேண்டியும் வழக்கிட்ட நிலையில் தற்பொழுது 05.12.2022ம் தேதி வில்லங்கம் பார்த்த பொழுது தாவா 2ம் லக்க சொத்தினை 6ம் பிரதிவாதி இந்த நிர் 7ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினருக்கு 20.10.2020ம் தேதி கிரையம் செய்து கொடுத்துள்ள விபரம் தெரிந்துகொண்டதாகவும் தாவா சொத்துக்கள் வாதி மற்றும் 1ம் பிரதிவாதிக்கு பூர்வீக பாத்தியப்பட்டதால் தாவா 2ம் லக்க சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி வாதியின் பாக உரிமையை பாதிக்கும் வகையில் 6ம் பிரதிவாதிக்கு 29.04.2019ம் தேதி கிரையம் செய்து கொடுத்துள்ள நிலையில் 29.04.2019 தேதிய கிரைய ஆவணம் மூலம் 1ம் பிரதிவாதியிடம் இருந்து தாவா 2ம் லக்க சொத்தினை கிரையம் பெற்ற 6ம் பிரதிவாதி 20.10.2020ம் தேதி கிரைய ஆவணம் மூலம் 7ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினருக்கு கிரையம் செய்து கொடுக்க உரிமையில்லை என்பதால் 7ம் எதிர்மனுதாரர் பெற்ற மேற்படி 20.10.2020 தேதிய கிரையம் வாதியின் பாக உரிமையை பாதிக்கக்கூடியது என்பதால் அசல் வழக்கில் பிறப்பிக்கப்படும் தீர்ப்புரையை கட்டுப்படுத்தி பெற 7ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர் அவசிய தரப்பினர் என வாதிடப்பட்டது.

**9.** மாறாக 7ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர் தாவா சொத்துக்கள் யாவும் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும் தாவா சொத்துக்களில் மனுதாரர்/வாதிக்கு உரிமை இல்லை என்றும், தாவா 2ம் லக்க சொத்தினை பொறுத்து 7ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர் பெற்ற 20.10.2020 தேதிய கிரையம் குறித்து தற்பொழுது தான் தெரியும் என மனுதாரர் மனுவில் கூறியுள்ளது பொய்யானது என்றும் பாகப்பிரிவினை வழக்கில் முதல்நிலை தீர்ப்பாணையின் போது வழக்குச்சொத்துக்களில் கிரையம் பெறுபவர்கள் அவசிய தரப்பினர்கள் அல்ல என்றும் அவர்கள் இறுதிநிலை தீர்ப்பாணையில் தான் அவர்கள் சேர்க்கவேண்டும் என எதிர்வாதம் செய்யப்பட்டது.

**10.** வழக்கு ஆவணங்களை காணும் பொழுது தாவா சொத்துக்கள் வாதி மற்றும் 1ம் பிரதிவாதிக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்றும் தாவா சொத்துக்களில்

வாதிகளுக்குரிய 1/2 பாகத்தை பிரித்துத் தரக்கோரியும் தாவா 1,2 லக்க சொத்துக்களை பொறுத்து 1 முதல் 6 பிரதிவாதிகள் ஏற்படுத்திய கிரையங்கள் இல்லா நிலையது என்ற விளம்புகை பரிகாரம் வேண்டியும் மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவில் கண்ட 7ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர் வழக்கு 2ம் லக்க சொத்தினை இந்த நிர் வழக்கின் மனுதாரர்/வாதி வழக்கிடும் முன்னரே 6ம் பிரதிவாதியிடமிருந்து 7ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர் 20.10.2020 தேதிய கிரைய ஆவணம் மூலம் கிரையம் பெற்றுள்ளார் என்பது நன்கு அறியக்கூடிய, இரு தரப்பிலும் ஒப்புக்கொள்ளக்கூடிய சங்கதி ஆகும். இந்நிலையில் தாவா சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினைக்கான அசல் வழக்கில் இந்த நிர் 7ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினரா எனக்காணும் போது பாகப்பிரிவினை வழக்கில் பங்குரிமையாளர் மட்டும் அவசிய தரப்பினர் ஆவார். ஏனெனில் அவர்களின்றி பாகப்பிரிவினை வழக்கில் உரிய பாகம் கணக்கிட்டு பிரிக்கலாகாது. பங்குரிமையாளரை தவிர்த்து தாவா சொத்துக்களை பொறுத்து பங்குரிமையாளரிடமிருந்து கிரையம் பெற்ற கிரையதாரர்கள் முதல்நிலை தீர்ப்பாணையின் போது அவசிய தரப்பினராகமாட்டார்கள். ஏனெனில் அவர்கள் கிரையம் பெற்ற, பங்குரிமையரின் பாக உரிமையை குறித்து தீர்மானிக்க அத்தகைய பங்குரிமையர் மட்டும் அவசிய தரப்பினர் ஆவார். மேற்படி பங்குரிமையாளர் வழக்குச் சொத்தினை கிரையம் பெற்ற கிரையதாரரின் கிரையத்தை பாதிக்கும் வகையில் வாதியுடன் கூட்டு சதி செய்து எதிர்வழக்காடாமல் இருந்தால் மட்டும் வழக்குச்சொத்துக்களில் கிரையம் பெற்ற கிரையதாரர்கள் தங்கள் கிரையம் மூலம் பெற்ற உரிமையை நிலைநாட்ட எதிர்தரப்பினர்களாக சேர்க்க அனுமதிக்கப்படுவர். மற்ற நேரங்களில் வழக்கு சொத்துக்களை கிரையம் பெற்ற கிரையதாரர்கள் பாகப்பிரிவினைக்கான இறுதிநிலை தீர்ப்பாணை மனுவில் சேர்க்கப்பட்டு அவர்கள் பாகம் தீர்மானிக்கப்படும் .

**11.** இவ்வழக்கும் மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கு சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை வேண்டி வழக்கிட்டுள்ளார். தாவா வழக்கின் 2ம் லக்க சொத்தினை மனுதாரர்/வாதி வழக்கிடும் முன்னரே 7ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர் 6ம் எதிர்மனுதாரர்/6ம் பிரதிவாதியிடமிருந்து கடந்த 20.10.2020 தேதிய

கிரைய ஆவணம் மூலம் கிரையம் பெற்றுள்ளார். வழக்கு சொத்து வாதி மற்றும் 1ம் பிரதிவாதிக்கு பூர்வீக பாத்தியப்பட்டதா, தனித்து பாத்தியப்பட்டதா என இம்மனுவில் பரிசீலிக்கலாகாது. தாவா 2ம் லக்க சொத்தினை பொறுத்து 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி 6ம் எதிர்மனுதாரர்/6ம் பிரதிவாதியிடம் கிரையம் செய்து கொடுத்து அதனை தொடர்ந்து 6ம் எதிர்மனுதாரர்/6ம் பிரதிவாதி இந்த நிர் 7ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ள போதிலும் பாகப்பிரிவினைக்கான அசல் வழக்கில் 7ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர் அவசிய தரப்பினர் ஆகமாட்டார். இம்மனுவில் விசாரணையின் போது 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் முன்வைக்கப்பட்ட மேதகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை C.R.P (PD)(MD).No.568 of 2015 சீராய்வு மனுவில் 21.02.2022ம் தேதி பிறப்புவித்த உத்திரவு மேற்கோள் காட்டப்பட்டது. 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் முன் வைக்கப்பட்ட மேதகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் மேற்படி சீராய்வு மனுவில் பாரா 10ல்

"In case, where the plaintiff's share has also been sold, it is settled position of law that any alienation made by other sharers will not binding the plaintiff's share. Therefore, the presence of the alienee during the preliminary proceedings is not essential. Alienee could only be proper parties to the preliminary proceedings and not necessary parties. Therefore, they are necessary parties only during the final decree proceedings".

என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் முன் வைக்கப்பட்ட மேற்படி முன் வழக்கு தீர்ப்பு இம்மனு பொருண்மை, சங்கதிகள் பொருந்தக்கூடியதாக உள்ளது.

**12.** எனவே மேற்கண்ட பரிசீலனை அடிப்படையில் மனுதாரர்/வாதி தரப்பில் மனுவில் குறிப்பிட்டுள்ள 7ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர் அசல் வழக்கில் அவசிய தரப்பினர் அல்ல என்றும் அவரை அசல் வழக்கில் 7ம் பிரதிவாதியாக சேர்க்க இயலாது என்றும் 7ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர் அசல் வழக்கின் இறுதிநிலை தீர்ப்பாணையின்போது மனுதாரர்/வாதி சேர்த்துக்கொள்ள தடையில்லை என்று தீர்மானிக்கப்படுகின்றது.

முடிவாக இம்மனு தள்ளுபடி செய்து உத்திரவிடப்படுகின்றது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்திரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, என் முன்னிலையில் கணினியில் அடிக்கப்பட்டு, பின் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2023ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22ம் நாளான இன்று என்னால் இந்த தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது.

**சார்பு நீதிபதி,**
**மானாமதுரை.**

மனுதார்/வாதி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை
எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் : இல்லை

**சார்பு நீதிபதி,**
**மானாமதுரை.**